# சீர் ஷார்ட்ஸ்

*உங்க பசங்களுக்கு ஸ்டைலான ஷார்ட்ஸ் வேணும்னு நினைச்சிட்டு இருந்தா இந்த டுடோரியல் உங்களுக்கானதுதான்.*






## தேவைப்படும் பொருள்கள்

45” மீட்டர் அகலமுள்ள 1 மீட்டர் சா∴ப்ட் காட்டன் பிரின்டட் துணி
சீர் ஷார்ட்ஸ் டெம்ப்ளேட், இதை நீங்க எங்க www.ushasew.comங்கற வெப்சைட்லேந்து டவுன்லோட் செய்துக்கலாம்
ஸ்கேல்
ஒரு அங்குல அகல எலாஸ்டிக்
∴பேன்சி பட்டன்
பொருத்தமான நூல்
தண்ணில அழியக்கூடிய மார்க்கர்
கத்தரிக்கோல்
அப்புறம் பின்





இந்த டுடோரியல்ல நீங்க ஷார்ட்ஸ் டெம்ப்ளேட்லேந்து பீஸ் கட் பண்ண, க்ரோட்ச் ஏரியா தைக்க, உள், பக்க சீம் தைக்க, வெய்ஸ்பான்ட் தயார் செய்ய, எலாஸ்டிக்க உள்ள நுழைச்சு அடிப்பகுதி ஹெம்மை முடிக்க கத்துப்பீங்க.



உங்களுக்கு பிடிச்ச பிரைட்டான எந்தத் துணிய வேணாலும் எடுத்துக்குங்க. இதுல காட்டியிருக்க மாதிரி துணிய அகலவாட்டில் மடிச்சிக்கங்க, அப்பதான் பிரின்ட் இல்லாத பக்கம் உங்களை நோக்கி இருக்கும். Www.ushasew.comலேந்து டவுன்லோட் செய்த ஷார்ட்ஸ் டெம்ப்ளேட்ட துணில வைக்கணும். இப்ப பின்பக்க டெம்ப்ளேட்லேந்து தொடங்கி அதை சரியான எடத்தில வெச்சு மணி கோர்த்த பின்னால பின் பண்ணிட்டே வரணும். அப்றம் முன்பக்க டெம்ப்ளேட் வெச்சு அதையும் சரியான இடத்தில பின் பண்ணனும். இது முடிஞ்சதும் இந்த ரெண்டு டெம்ப்ளேட்டயும் மார்க்கிங் பேனாவால துணில ட்ரேஸ் பண்ணனும். ட்ரேஸ் பண்ணி முடிஞ்சதும், டெம்ப்ளேட் பின்னை எடுத்துட்டு ட்ரேஸ் பண்ணின லைன்லயே கட் பண்ணனும். கவனமா ரெண்டு பீசையும் கட் பண்ணிட்டு அதை பக்கத்தில பக்கத்தில வைங்க. இப்ப உங்ககிட்ட நாலு தனித்தனி பீஸ் இருக்கும்.







ஸ்டெப் 2 க்ரோட்ச் பகுதியை தைத்தல்

பீஸ்களை ஒன்னா சேர்க்க இப்ப க்ரொட்ச் பகுதிய தைக்கலாம். துணிய உங்க உஷா ஜானோம் வொண்டர் ஸ்டிட்ச் தையல் மிஷினுக்கு எடுத்துட்டுப் போங்க. பிரஸ்ஸர் ஃபூட்டின் விளிம்புல துணிய அலைன் பண்ணிக்கங்க. ஸ்டிட்ச் செலக்டார் டயல் Aக்கும் தையல் நீளத்த 2.5.க்கும் செட் பண்ணிகிட்டு, தைக்க ஆரம்பிச்சிருங்க. ஒருசில தையல் போட்ட தையல் பிரியாம இருக்க உடனே ஒரு ரிவர்ஸ் ஸ்டிட்ச் போடுங்க. கடைசி வரைக்கும் தைச்சிட்டே போங்க. நூலை கட் பண்ணிட்டு அதே மாதிரி பின்பக்க பீஸ்ல க்ரோட்ச் பகுதியை தையுங்க. ஆரம்பத்திலயும் முடியற இடத்திலயும் ரிவர்ஸ் ஸ்டிட்ச் போட மறந்துராதீங்க.















ஸ்டெப் 3 ரெண்டு பகுதிகளையும் ஒன்னா சேர்க்க பக்கங்களை, உட்புற சீம்-அ தைக்கறது

நீங்க தெச்ச பீஸ் பாக்க இப்படி இருக்கணும். இப்ப முன்பக்க பீஸ பின்பக்க பீஸ் மேல வெயுங்க, சரியான பக்கம் சரியான பக்கத்தை பாக்கறா மாதிரி வெச்சு பக்க சீம்-ஐ தைக்கலாம். இதுல காட்டியிருக்கற மாதிரி உள் சீம்-அ பின் பண்ணுங்க. இது முடிஞ்சதும், உட்புற சீம்-அ தைக்க தொடங்கலாம், தைச்சிட்டே போகறப்ப பின்-அ நீக்கிட்டே போகணும். செய்து முடிச்சதும், நூலை கட் பண்ணிட்டு பக்க சீம்க்கு போங்க. கடைசி வரை தொடர்ந்து தையுங்க. அதுக்கு அப்றம் அடுத்தப் பக்கத்துக்குப் போய் தையுங்க.

அடுத்து நம்ப லிஸ்ட்ல உள்ளது ஜிக் ஜாக் தையல். ஓரம் சீரா இல்லாம இருக்கறதை தவிர்க்க, சீம்-க்கு நேர்த்தியான ஃபினிஷ் குடுக்க இது போடப்படுது. பேட்டன் செலக்டார் டயலை C-க்கும் தையல் நீளம் 1.5க்கும் செட் பண்ணிகிட்டு சைட் சீம் அப்புறம் உட்புற சீமை ஒட்டி தையுங்க. இது திரும்பத் திரும்ப செய்யற வேலை போல தோணலாம் ஆனா ரொம்ப ரொம்ப முக்கியமான ஸ்டெப் இது.










ஸ்டெப் 4 வெய்ஸ்ட்லைன் தயாரித்தல் பாட்டம் ஹெம் முடித்தல்

ஷார்ட்ஸ திருப்பி போட்டு வெய்ஸ்ட்லைனை கால் அங்குலத்துக்கு மடிச்சு அதை அயர்ன் பண்ணுங்க. அப்புறம் மறுபடியும் கால் அங்குலம் மடிச்சு திரும்பவும் அயர்ன் பண்ணுங்க. இது மடிப்பை பிரியாம வெச்சிருக்கும், தைக்க ஈசியா இருக்கும். முழு வெய்ஸ்ட்லைனுக்கும் இதையே செய்யுங்க. கால் ஹெம்முக்கும் இதே செயல்முறைய திரும்பச் செய்யணும். கால் அங்குலம் மடிச்சு, அதை அயர்ன் பண்ணுங்க. அப்புறம் மறுபடியும் கால் அங்குலம் மடிச்சு அயர்ன் பண்ணுங்க. ரெண்டு காலுக்கும் இதைச் செய்யுங்க.

அதுக்கு அப்புறம், துணிய மிஷினுக்கு கொண்டுபோய் நேர்தையலுக்கு பேட்டன் செலக்டார் டயலை Aல, தையல் நீளத்தை 2.5.க்கு செட் பண்ணுங்க.




வெய்ஸ்ட்லைன்ல தொடங்கி மடிப்புகளுக்கு மேல தையுங்க. பக்க சீம்-ன் ரெண்டு பக்கத்திலயும் ரெண்டு அங்குல இடைவெளி விடுங்க.



இப்ப லெக் ஹெம்முக்கு போய், மடிப்புக்கு மேல தைக்கணும். அருமையான வேலை, நீங்களே பாருங்க இப்ப நாம கிட்டத்தட்ட ஷார்ட்ஸ் தெச்சே முடிச்சாச்சு.

**ஸ்டெப் 5 எலாஸ்டிக்கை இணைச்சு வெய்ஸ்ட் லைனை முடித்தல்**




இப்ப எலாஸ்டிக் பான்டை எடுத்துகிட்டு 4லேந்து 9 வயசு உள்ளவங்களுக்காக 10 அங்குலமும், 10லேந்து 14 வயசு வரை உள்ளவங்களுக்காக 12 அங்குலமும் அளந்து எடுத்துகிட்டு கட் பண்ணுங்க. ஒரு சேஃப்டி பின் எடுத்து ஒரு மூலைல அட்டாச் பண்ணுங்க, இது எலாஸ்டிக்கோட எதிர்முனை நழுவிராம வெச்சிருக்க உதவும்.





இந்த எலாஸ்டிக் பின்பக்கமா நுழைக்கப்படும், இதுதான் நம் பின்பக்கம். ரெண்டு அங்குல இடைவெளில எலாஸ்டிக்க நுழையுங்க, அதை வெயிஸ்பான்ட் முழுசா உள்ள தள்ளுங்க, இப்படி செய்யறப்ப பின் செய்யாத பகுதியோட முனை இதுல காட்டியிருக்க மாதிரி பக்க சீம் மேல இருக்கறதை உறுதி செய்துக்கணும். இதுக்கு மேல தையல் போட்டு சரியான எடத்தில லாக் பண்ணிரணும். இங்க ஆரம்பத்திலயும் முடிவுலயும் ரிவர்ஸ் ஸ்ட்ரிச் யூஸ் பண்ண மறக்காதீங்க. நூலை கட் பண்ணிட்டு எலாஸ்டிக்-அ வெய்ஸ்ட்பான்டுக்குள்ள அட்ஜஸ்ட் பண்ணி அதை இன்னொரு ரெண்டு அங்குல கேப் வழியா வெளிய இழுங்க. சேஃப்டி பின் எடுத்துட்டு மறுபடியும் எலாஸ்டிக்-அ வெய்ஸ்ட்பான்டுக்குள்ள இன்சர்ட் பண்ணி எலாஸ்டிக்கோட முனை சைட் சீம்-க்கு மேல வர்ற மாதிரி மறுபடியும் அட்ஜஸ்ட் பண்ணுங்க. இப்ப முன்னாடி மாதிரி அதுக்கு மேல தையுங்க. அடுத்த பக்கத்திலயும் இதே விஷயத்தை மறுபடியும் செய்யுங்க.



**ஸ்டெப் 6 பட்டன் வைத்தல்**



இறுதி ஸ்டெப்புக்கு, உங்களுக்கு பிடிச்சா மாதிரி ஷார்ட்ஸ அழகுபடுத்திக்கங்க, நாங்க சில பொருத்தமான பட்டன்களை யூஸ் பண்ணியிருக்கோம். பட்டன்களை எப்படி இணைக்கணுது அப்புறம் மற்ற அழகுபடுத்தும் டிப்ஸ்-க்கு எங்க www.ushasew.comக்கு விசிட் பண்ணுங்க.



இது ரொம்ப அழகாவும் ஸ்டைலிஷாவும் இருக்குதானே? உங்க நண்பர்கள் அப்புறம் மற்ற பெற்றோர்கள் நிச்சயமா உங்க பிள்ளையோட ஸ்டைல பாத்து இம்ப்ரெஸ் ஆகியிருப்பாங்க. நீங்க என்ன நினைக்கறீங்கங்கறதை கீழ உள்ள கமென்ட் பிரிவுல தெரிவியுங்க.